Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 20, 2021

செவ்வாய்க்கிழமை ஜூலை 20, 2021 | ஒளி: 07 கதிர்: 51 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## ‘காட்டிக்கொடுக்காமல் தோற்கடிப்போம்’

பா.நிரோஸ்



அரசாங்கத்துக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கம், மூன்றிலிரண்டு பெரும்பான்மையில் தோற்கடிக்குமெனத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, கம்மன்பிலவைக் காட்டிக்கொடுக்க போவதில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தரம் 1க்கு மாணவர்களைச் சேர்த்தல்

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

அரச பாடசாலைகளில் 2022ஆம் ஆண்டில் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.




விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி ஜூலை மாதம் 31 என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அதனை தற்போது ஒகஸ்ட் மாதம் 07ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், நேற்று (19) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இரண்டாவது முறையாகப் போட்டியிட விருப்பம்

# திரும்பினார் கோட்டாபய



**இன்னும் 5 வருடங்கள் வேண்டும் என்கிறார்**

**மொட்டு ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம்**

**பங்காளிகளுக்கு இடையே பிசுபிசுப்பு**

தான் இரண்டாவது தடவையாகவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில், ஒரு தடவை மாத்திரமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்ததாகவும் கூறனார்.

இந்த நிலையில், அந்தத் தீர்மானத்திலிருந்து விலகியுள்ள ஜனாதிபதி கோட்டாபய, இந்தப் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பு,

தொடர்ச்சி P2

## ஒகஸ்டில் திறப்பு; நவம்பரில் பரீட்சைகள்



தரம் 5 புலமைப் பரிசில் மற்றும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைகளுக்கான புதிய திகதியை, கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் என்று, கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ், நேற்று (19) தெரிவித்தார்.

அத்துடன், கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்து, டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சர் கூறினார்.

தொடர்ச்சி P2

### சிறுமி விவகாரத்தில்

## ‘சஜித் ஏன் மௌனம்? ரிஷாட்டை விலக்குவாரா?’

**மஹிந்தானந்த கேள்வி**

பா.நிரோஸ்



ரிஷாட்டின் வீட்டில் வைத்து மரணமடைந்த சிறுமி தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏன் இதுவரையில் வாய்திறக்கவில்லை எனக் கேள்வி எழுப்பிய அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து முடிந்தால் ரிஷாட்டை விலக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில்

தொடர்ச்சி P2

### இன்று சந்திப்பு;

## தீர்வு இன்றேல் போராட்டம்

கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸூக்கும் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகியுள்ள ஆசிரியர்கள், அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும், இடையிலான சந்திப்பு, இன்று (20) இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லையெனில், எதிர்வரும் வியாழக்கிழமை (22) கொழும்பில் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## டயகம சிறுமி விவகாரம்; பலரிடம் வாக்குமூலம் பதிவு

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் வீட்டில் பணி புரிந்த நிலையில், தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த சிறுமி, பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘பபா’ போல மரிக்கார்; சபையில் கூச்சல்

பா.நிரோஸ்



வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட் நம்பிக்கையில்லாப் பிரேரணையை, அக்கட்சியினர் பாராளுமன்றத்தில் முறையாக சமர்ப்பிக்கவில்லை என சபையில் நேற்று (19) ஆளுங்கட்சியினருக்கும், எதிர்க்கட்சியினருக்குமிடையில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

தொடர்ச்சி P2



## கமன்பிலவை வெளியேற்றுவோம்

“எரிபொருள் விலையை உயர்த்திய கமன்பிலவை வெளியேற்றுவோம்; நிவாரணத்தை குறைத்து நாட்டை அழிக்கும் ஒடுக்குமுறை அரசாங்கத்தை விரட்டுவோம்” எனும் கருப்பெருளில், ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம், பாராளுமன்ற சுற்றுவட்ட வளாகத்தில் நேற்று (19) காலை நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை தாங்கியதோடு, ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட ஏராளமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தன்னிச்சையாக அதிகரித்த எண்ணெய் விலையை அரசாங்கம் குறைத்து, மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று கலந்துகொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஏகமனதாகக் கோரினர்.



## நட்புக்கு பணம் வேண்டாம்

**அமெரிக்கா அறிவிப்பு**




அமெரிக்காவால் இலங்கைக்கு நட்பு ரீதியிலேயே மொடர்னா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ், அதற்காகப் பணம் செலுத்தத் தேவையில்லை என்று கூறியுள்ளார்.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் நேற்று (19) செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 52 மோப்ப நாய்கள் சுற்றி வளைக்க 3,009 பேர் சிக்கினர்



நாடு முழுவதும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 3,009 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை, பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (19) தெரிவித்ததுடன், பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 14,927 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர் எனக் கூறினார்.

இதன்போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய 580 பேரும்,

தொடர்ச்சி P2

## போர்ட் சிட்டிக்குள் சிக்கிய சீன பிரஜை

கொழும்புத் துறைமுக நகரப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைய முற்பட்ட குற்றச்சாட்டில் சீனப் பிரஜை உள்ளிட்ட 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண, நேற்று (19) தெரிவித்தார்.

துறைமுக நகரத்துக்கும் கொழும்புத் துறைமுகத்துக்கும் இடையில் அதிவேக நெடுஞ்சாலை அமைப்புக்கும் பணிகள்

தொடர்ச்சி P2



## விசேட கண்காணிப்பு புதனன்று ஆரம்பம்

இவ்வார நீண்ட விடுமுறை நாள்களைக் கருத்தில்கொண்டு, நாளை புதன்கிழமை (21) முதல் நாடளாவிய ரீதியில் சிறப்புத் தனிமைப்படுத்தல் தொடர்பான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் பேச்சளார் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் பகுதிகள், ஏனைய மாகாணங்களில்

தொடர்ச்சி P2



### நம்பிக்கையில்லாப் பிரேரணையை

## கூட்டமைப்பு ஆதரிக்கும்

**அரசாங்கம் காணாமலாக்கப்படுமென எச்சரிக்கை**



பா.நிரோஸ்

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வாக்களிக்குமெனத் தெரிவித்த அதன் பாராளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம், “தற்போதைய அரசாங்கம் விரைவிலேயே நாட்டு மக்களால் காணாமலாக்கப்படும்” எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘காட்டிக்கொடுக்காமல் தோற்கடிப்போம்’

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, அரசாங்கத்தின் ஒற்றுமை மற்றும் பலத்தை தவறாக எடைபோட்டுக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது, நாளை (இன்று) மாலை தெரியவருமெனவும் அவர் கூறினார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தோடு, தேசிய பாதுகாப்பும் காட்டிக்கொடுக்கப்பட்டது. எனினும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இவை அனைத்தும் சரி செய்யப்பட்டதோடு, நாட்டு மக்களுக்கும் வரிகளைக் குறைத்து நிவாரணங்களை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

“பொருளாதாரத்தை வலுப்படுத்தவே இவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்பட்டது. எனினும், எதிர்பாராத விதமாக நாடு கொரோனா வைரஸ் தொற்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டை நிர்வகிப்பதற்கு நிதி அவசியம்” எனவும் தெரிவித்தார்.

“அரசாங்கத்துக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்றிலிரண்டு பெரும்பான்மையோடு தோற்கடிப்போம். கம்மன்பிலவை காட்டிக்கொடுக்க ப்போவதில்லை” எனவும் அவர் தெரிவித்தார்.

“இந்தியா, சீனா ஆகிய நாடுகளை விட அதிகளவான வேகத்தில் தடுப்பூசிகளை இலங்கையில் செலுத்தப்படுகிறது. ஒகஸ்ட் இறுதிக்குள் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், வருட இறுதிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் நாட்டில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு, மீண்டும் நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படும்” எனவும் தெரிவித்தார்.

# திரும்பினார் கோட்டாபய



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (19) இடம்பெற்ற சந்திப்பில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது தீர்மானத்தை, ஜனாதிபதி வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தனது கொள்கையைச் செயற்படுத்த எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு மேலதிகமாக, 5 ஆண்டுகள் தேவைப்படுவதாக ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், அதன்போது, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அல்லது விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வேட்பாளர்களாகப் போட்டியிடுவார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அதேநேரம், கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவைத் தோற்கடித்து, நாட்டு மக்களின் பெரும்பான்மை வாக்குகளுடன் ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

> **“2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், அதன்போது, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அல்லது விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வேட்பாளர்களாகப் போட்டியிடுவார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர்**

## ஒகஸ்டில் திறப்பு; நவம்பரில் பரீட்சைகள்

வழமையாக வருடந்தோறும் ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற வேண்டிய இந்தப் பரீட்சைகள் இரண்டுமே கொரோனா வைரஸ் தொற்று நிலையை அடுத்து, நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளையும் சுகாதார அமைச்சின் அனுமதியுடன், திட்டமிட்டபடி எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதியில் மீளத் திறப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்தனர்.

பாடசாலைகளில் பணிபுரியும் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே கல்வியமைச்சர் இதனைத் தெரிவித்தனர்.

அதன்படி, மேல் மாகாணத்தில் 97 சதவீதமான ஆசிரியர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும், தென் மாகாணத்தில் 83 சதவீதமானோரும் ஊவா மாகாணத்தில் 68 சதவீதமானோரும், வடமேல் மாகாணத்தில் 58 சதவீதமானோரும், வட மாகாணத்தில் 57 சதவீதமானோரும் கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

அதேநேரம், வடமத்திய மாகாணத்தில் 56 சதவீத ஆசிரியர்களுக்கும், சப்ரகமுவ மாகாணத்தில் 52 சதவீத ஆசிரியர்களுக்கும், மத்திய மாகாணத்தில் 42 சதவீத ஆசிரியர்களுக்கும், கிழக்கு மாகாணத்தில் 27 சதவீத ஆசிரியர்களுக்கும் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தனர்.

## டயகம சிறுமி விவகாரம்; பலரிடம் வாக்குமூலம் பதிவு

நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் இந்த விடயம் தொடர்பில் தகவல் வெளியானதாக நேற்று (19) தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண, சிறுமியின் மரணம் குறித்து பல்வேறு தரப்பிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

பொரளை பொலிஸார் மற்றும் கொழும்பு தெற்கு பெண்கள் மற்றும் சிறுவர் விசாரணை பிரிவு என்பன இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சிறுமியை டயகம பகுதியிலிருந்து கொழும்புக்கு வீட்டு வேலைக்காக அழைத்து வந்த நபரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேநேரம் ரிஷாட் பதியூதீனின் மனைவியின் தாய், தந்தை ஆகியோரிடம் நேற்று முன்தினம் (18) மீண்டும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளதாக ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் இந்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரிஷாட் பதியூதீனின் வீட்டில் பணியாற்றிய டயகம பகுதியை சேரந்த சிறுமி, தீகாயங்களுடன் கடந்த 3ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி கடந்த 15ஆம் திகதி மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## 52 மோப்ப நாய்கள் சுற்றி வளைக்க 3,009 பேர் சிக்கினர்

போதைப்பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 1,250 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 645 பேரும், பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 98 பேரும், கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மேலும், ஏனைய குற்றச்செயல்கள் தொடர்பில் 431 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 52 மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

இதேநேரம், சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்த 5 பேர், அநுராதபுரம், அம்பாறை, எம்பிலிபிட்டிய திருகோணமலை மற்றும் காலி ஆகிய பகுதிகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நபர்களை தேடிச்செல்லும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நபர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சென்று சரணடையுமாறு அவர் கோரினார்.

அவ்வாறு இல்லாதபட்சத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## விசேட கண்காணிப்பு புதனன்று ஆரம்பம்

இருந்து வெளியேறும் மற்றும் உள்நுழையும் பகுதிகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார்.

அத்துடன், மேல் மாகாணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் முகக்கவசம் தொடர்பில் மேலதிக கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையே பயணிப்பதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், நெருங்கிய உறவினர்களின் மரணம் மற்றும் மருத்துவ தேவைகளுக்காக மட்டும் மாகாணங்களுக்கு இடையே பயணிப்பதற்கு அனுமதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## ‘பபா’ போல மரிக்கார்; சபையில் கூச்சல்

நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபையில் சமர்ப்பிக்கும்போது, அதனை சமர்ப்பித்து உரையாற்றுபவர், அப்பிரேரணையின் உள்ளடக்கங்களை சபையில் வாசித்து, அதனை முன்மொழிய வேண்டும். பின்னர் அதனை மற்றொருவர் வழிமொழிந்து உரையாற்ற வேண்டும்.

எனினும், நேற்றைய அமர்வில் கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து முன்மொழிந்து உரையாற்ற வேண்டிய எஸ்.எம்.மரிக்கார் எம்.பி, பிரேரணையின் உள்ளடக்கங்களை வாசிக்காது உரையாற்றினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை முறையாக சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை என இதன்போது சபை முதல்வரும் அமைச்சருமான தினேஸ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எவ்வாறு சமர்ப்பிப்பதென்று தெரியாது ‘பபா’ போல மரிக்கார் செயற்படுவதாக அமைச்சர் விமல் வீரவன்சவும் சாடினார்.

இதனை தொடர்ந்து, பிரேரணையின் உள்ளடக்கங்களை மறுபடியும் எழுந்து வாசிக்க மரிக்கார் முயற்சித்ததால், மரிக்காருக்கு மீண்டும் உரையாற்ற வாய்ப்பு வழங்கக்கூடாதென விமல் உள்ளிட்ட ஆளுங்கட்சியினர் எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் சபையில் பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

எனினும், இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததோடு, தயவுசெய்து பிரேரணையின் உள்ளடக்கங்களை வாசிப்பதற்கு மரிக்காருக்கு இடங்கொடுக்க வேண்டுமெனவும் கூறினார்.

இதனை தொடர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உள்ளடக்கங்களை மரிக்கார் வாசித்து, பிரேரணையை சபையில் முன்மொழிந்ததோடு, அதனை வழிமொழிந்து, கபீர் ஹாசிம் எம்.பியும் உரையாற்றினார்.

## போர்ட் சிட்டிக்குள் சிக்கிய சீன பிரஜை

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், குறித்த பணிகளுக்கு மனிதவளத்தை வழங்கும் நிறுவனத்தின் உரிமையாளரான சீன பிரஜை, மேலும் நான்கு நபர்களுடன் அனுமதியின்று உள்நுழைய முயற்சித்துள்ளார்.

இதன்போது, கொழும்புத் துறைமுகத்தில் விமலதர்ம சோதனை சாவடியில் கடமையில் இருந்த அதிகாரிகளால் இவர்கள் கைதுசெய்யப்பட்டு, கரையோரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த சீன நபர், துறைமுகத்துக்குள் பிரவேசிக்கும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரம் இன்றி, இவ்வாறு ஏனைய நபர்களை துறைமுக நகரப் பகுதிக்குள் அழைத்துச் செல்ல முயற்சித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சீனப் பிரஜையுடன் கைது செய்யப்பட்ட மற்றைய நால்வரும் பொத்துவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

## சஜித் ஏன் மௌனம்? ரிஷாட்டை விலக்குவாரா?

கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், “ரிஷாட் பதியூதீன் அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவந்தோம். அப்போது முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் ரிஷாட்டுக்காக தமது பதிவிகளை இராஜினாமா செய்திருந்தார்கள். தற்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?” எனவும் அவர் இதன்போது வினவினார்.

“ரிஷாட்டின் வீட்டில் பணிபுரிந்த சிறுமி ஒருவர் துஷ்பிரயோகப்படுத்த ப்பட்டு, தீக்காயங்களுடன் மரணமடைந்துள்ளார். இந்த விடயத்தை தெரிந்துகொண்ட ரிஷாட் அச்சத்தில் வைத்தியசாலைக்குச் சென்று தங்கிவிட்டார். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எதையும் கூறவில்லை” என்றார்.

“ரிஷாட்டுக்கு எதிராக இதுமட்டுமல்ல; சதொசவில் கோடிக்கணக்கான பண ஊழல் தொடர்பிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. ரிஷாட்டை ஏன் தண்டிக்கவில்லை எனக் கேட்கிறார்கள். நீங்கள் இவ்வாறே அமைதியாக இருங்கள். நாங்கள் சரியான நேரத்தில், உரிய வகையில் ஆதாரங்களை திரட்டி, வழக்குத் தொடர்வோம்” எனவும் தெரிவித்தார்.

“முடிந்தால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ரிஷாட்டை விலக்க வேண்டும். ஆனால், சஜித், ரிஷாட்டை விலக்கப்போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி ரிஷாட்டின் பணத்திலேயே இயங்கி வருகிறது. அக்கட்சிக்காக ரிஷாட்டே நிதி உதவி செய்கிறார். எனவே, ரிஷாட்டைப் பாதுகாப்பதைத் தவிர, சஜித்துக்கு வேறு வழியில்லை” எனவும் மேலும் தெரிவித்தார்.

> **“ரிஷாட் அச்சத்தில் வைத்தியசாலைக்குச் சென்று தங்கிவிட்டார். ரிஷாட்டுக்கு எதிராக இதுமட்டுமல்ல; சதொசவில் கோடிக்கணக்கான பண ஊழல் தொடர்பிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. நீங்கள் இவ்வாறே அமைதியாக இருங்கள். நாங்கள் சரியான நேரத்தில், உரிய வகையில் ஆதாரங்களை திரட்டி, வழக்குத் தொடர்வோம்**

## நட்புக்கு பணம் வேண்டாம்

நண்பர்கள் ஒருவருக்கொருவர் தேவையான உதவிகளைச் செய்வதைப் போன்றே அமெரிக்காவால் இலங்கைக்கு அவசியமான மொடர்னா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இலங்கை மக்களுக்கான அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள நிலையில், அதற்காக யாரும் அமெரிக்காவுக்குப் பணம் செலுத்தவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவெக்ஸ் தடுப்பூசி வழங்கல் திட்டத்தின்கீழ் அமெரிக்காவால் வழங்கப்பட்ட 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகள் பிரத்யேக விமானமொன்றின் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடைந்தன.

இவற்றில் 7 இலட்சத்து 50 ஆயிரம் மொடர்னா தடுப்பூசிகள் முதல் டோசாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்றும், ஒரு மாதத்தின் பின்னர் எஞ்சிய 7 இலட்சத்து 50 ஆயிரம் மொடர்னா தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக பயன்படுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது.

> **“நண்பர்கள் ஒருவருக்கொருவர் உதவிகளைச் செய்வதைப் போன்றே ன மொடர்னா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. இது இலங்கை மக்களுக்கான அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள நிலையில், அதற்காக யாரும் பணம் செலுத்தவேண்டியதில்லை**

## ‘கூட்டமைப்பு ஆதரிக்கும்’

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், “கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தால், சர்வதேச ரீதியில் இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இச்சட்டத்தைப் பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கடத்தப்பட்டும், கொலை செய்யப்பட்டும், சித்தரவதை செய்யப்பட்டும் உள்ளனர். இந்நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளப்போவதாக அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்கள் எப்படி காணாமலாக்கப்பட்டார்களோ அதேபோல தற்போதைய அரசாங்கம் விரைவிலேயே நாட்டு மக்களால் காணாமலாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

தற்போது காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஒகஸ்ட் மாதம் 07ஆம் திகதிக்கு முன்னர் குறித்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

2022 ஜனவரி 31ஆம் திகதியன்று 5 வயதை பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

அதேநேரம், மாதிரி விண்ணப்பத்தை கல்வியமைச்சின் அதிகாரப்பூர்வ வலைத்தளமான 'www.moe.gov.lk' இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.



# 'நழுவும் அரசாங்கம் நாம் அல்ல'

பா.நிரோஸ்



ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் அமைச்சரவை உபகுழுவின் ஊடாகவே எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சர் ஒருவர் மீது அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் சுமத்திவிட்டு, நழுவும் அரசாங்கம் நாம் அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அரச நிதி தொடர்பிலான நெருக்கடி, அந்நிய செலாவணி, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் எதிரணியின் நெருக்கடி என மூன்று நெருக்கடிகளுக்குத் தற்போதைய அரசாங்கம் முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

2017, 2018ஆம் ஆண்டுகளில் எரிபொருள்களில் அதிகமான வருமானம் கிடைத்தது. கடந்த அரசாங்கத்தால் முழுமையாக நாசமாக்கப்பட்ட நாட்டையே முழுமையாகக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையானது படுதோல்வியடையும் எனவும், கம்மன்பில மிகவும் திறமையானவர் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

உரிமைகள் தொடர்பில் பேச

# ரணிலுக்குத் தகுதியில்லை

பா.நிரோஸ்

பிரதமராக இருந்தபோது அரசியமைப்பை மீறிய முன்னாள் பிரதமரும் தற்போதையப் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (19) அமர்வின்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் சரத் வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, அரசமைப்பை மீறி, நிதி மோசடி விசாரணைப் பிரிவை உருவாக்கியிருந்தார். பிரதமராக இருந்தபோது அரசமைப்பை இவ்வாறு மீறிய ரணிலுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் ரிஷாட் பதியூதீன் கைது செய்யப்படவில்லை. மாறாக அவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் இருப்பதாலேயே அவர் கைது செய்யப்பட்டு உள்ளார். இதுதொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல, பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோவை கைது செய்வதற்கு எந்தவிதமானத் திட்டங்களும் இருக்கவில்லை.

எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் எனத் தனக்குத் தெரியுமென ஹரீன் எம்.பி கூறியிருக்கிறார். சூத்திரதாரி யாரென உண்மையில் அவருக்கு தெரியுமாக இருந்தால், அது தேசிய பாதுகாப்போடு தொடர்புடைய விடயம். எனவே, அதுதொடர்பில் சி.ஐ.டிக்கு சென்று அவர் முறைப்பாடு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எரிபொருள்

# விலை அதிகரிப்பை மறுபரிசீலனை செய்க

பா.நிரோஸ்



எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில், எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

வாகனங்களுக்கு வருடத்துக்கு அறவிடப்படும் வரியையும் குறைக்க வேண்டுமெனத் தான் கோரிக்கை விடுப்பதாகவும், இதனால் சாதாரண மக்களின் செலவுகள் குறைக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

சொகுசு வாகனங்களைப் பதிவு செய்யும்போது அறவிடப்படும் வரியை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# கம்மன்பில ஆடையுடனா சபைக்கு வந்துள்ளார்?

பா.நிரோஸ்



ஆடைகளை அணிந்துகொண்டா கம்மன்பில சபைக்கு இன்று வந்துள்ளார்? எனக் கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தோற்றாலும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அது வெற்றியே எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எரிபொருள் விலை அதிகரிப்பால் அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, அவர் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தியிருந்தனர். தற்போது கம்மன்பில ஆடைகளை அணிந்து கொண்டா பாராளுமன்றத்துக்கு வந்துள்ளார் எனவும் அவர் இதன்போது வினவினார்.

2013ஆம் ஆண்டு முதல் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வருமானத்தைப் பெற்று வருகிறது. எனினும், அது நட்டத்தில் இயங்குவதாக கம்மன்பில கூறுகிறார். ஈரான், குவைட், டுபாய், சீனா உள்ளிட்ட நாடுகளில் அவர்களுக்கு சொந்தமானதாகவே பெற்றோலிய சுத்திகரிப்பு உள்ளன. ஆனால், இங்கு தனியார் மயப்படுத்தி வெளிநாட்டவர்களுக்கு வழங்குவது பாரதூரமான பிரச்சினையே எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கைது

# சர்வதேச பாராளுமன்றில் முறையிட முடியும்

பா.நிரோஸ்



பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதுசெய்வதற்கு எந்தக் காரணமும் இல்லை எனத் தெரிவித்த முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பில் சர்வதேச பாராளுமன்றத்திலும் முறையிட முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, உலகில் எந்த நாட்டிலும் இல்லாத வகையிலேயே பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கையில் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன் கைது செய்யப்பட்டதும், ஹரின் பெர்ணான்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை அடிப்படையாகக்கொண்டு பொலிஸார் விசாரணை நடத்துவதும் பாராளுமன்றத்தின் வரப்பிரசாதத்தை மீறும் செயல் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோவை கைது செய்வது பாராளுமன்ற உறுப்பினர் வரப்பிரசாதங்களை மீறும் செயல். கைது செய்யப்படுவதற்கான காரணங்களையும் விசாரணை மேற்கொள்வதன் காரணத்தையும் பொலிஸார் சபைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# எரிபொருள் விலையை குறைக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

பா.நிரோஸ்



எரிபொருள் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி, பிரதமர், புதிய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரிடம் தான் கோரிக்கை விடுப்பதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ, அக்கட்சிக்கு பெரும் பலமாக இருந்தவர். ஐ.ம.சக்தியை பலப்படுத்த அவர் பல்வேறு முயற்சிகளை கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தார். ஆனால், தற்போது அவருக்காகப் பேசுவதற்கு அக்கட்சியில் எவரும் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவே தற்போது அவருக்காகப் பேசிவருகிறார் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்காகவும், கம்மன்பிலவை வீழ்த்துவதற்காகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்தார்கள். ஆனால், சபையில் இன்று உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்கவின் உரையில், ஐக்கிய மக்கள் சக்தியினர் 'நொக்கவுட்' ஆகியுள்ளனர் என்றார்.

ஜனாதிபதி, பிரதமர், புதிய நிதி அமைச்சரிடம் எரிபொருள் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் கோரிக்கை விடுப்பதாகவும், கொரோனா வைரஸ் நாட்டில் அதிகரிக்க வேண்டுமென்றே எதிர்க்கட்சியினர் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# மஹிந்தவா அந்த சதிக்காரர்?

பா.நிரோஸ்



எரிபொருள்களின் விலையை திடீரென அதிகரித்து, அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ள, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சதி செய்தாரா என வினவிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், எரிபொருள் விலையை அதிகரித்ததாலா, மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்த நிதி அமைச்சுப் பறிக்கப்பட்டது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் வினவினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதற்கான சதியாகவே, திடீரென எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதாக, ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார்.

ஆனால், எரிபொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் விளக்கமளித்த வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டுமென எழுத்துமூலமாக தனக்கு அறிவித்ததாகத் தெரிவித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

காட்டுமிராண்டித்தனமான நிர்வாகத்தால்

# மலையக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்

பா.நிரோஸ்



ஒருபக்கம் அரசாங்கத்தின் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வாலும், மறுபக்கம் பெருந்தோட்ட நிர்வாகங்களின் காட்டுமிராண்டித்தனமான நிர்வாகத்தாலும் மலையக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எரிபொருள் விலை அதிகரிப்பால் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மலையக மக்களுக்கு என்ன நிவாரணங்களை அரசாங்கம் வழங்கப்போகிறதெனவும் கேள்வி எழுப்பிய அவர், எவ்வாறு மலையக மக்களை வாழ வைக்கப்போகிறார்கள் என்பதற்கு ஜனாதிபதி, பாராளுமன்றமும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அதுவே தற்போதைய தேவை. அதற்குப் பதிலாக நீலிக்கண்ணீர் வடித்து மலையக மக்களை அரசாங்கம் ஏமாற்றக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டு. ஊடகவியலாளர்களின்

# பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்

## ஜனாதிபதிக்குக் கடிதம்

வா.கிருஸ்ணா

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் விசாரணைகளை நிறுத்தி, எமது ஊடக சங்கத்தினதும், அதில் பதவி வகிக்கும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் குறித்த ஒன்றியம், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஜனநாயக விரோதச் செயல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து, அவர்களை மறைமுகமாகவும் நேரடியாகவும் அச்சுறுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

எமது ஊடக சங்கத்தின் செயலாளர் செல்வக்குமார் நிலாந்தனை, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவு அதிகாரிகள், கல்லடியிலுள்ள அலுவலகத்துக்கு கடந்த 12ஆம் திகதி அழைத்து, சுமார் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

இதன்போது, எமது செயலாளரிடம் அவரது பேஸ்புக், மின்னஞ்சல், வங்கிக் கணக்கு உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவு அதிகாரிகள் பெற்றுக்கொண்டதுடன், குறித்த கணக்குகளுக்கான கடவுச்சொற்களையும் வழங்குமாறு கோரியுள்ளனர்,

இவ்வாறு தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது, மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் சிலரை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தி, ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் விசாரணைகளை நிறுத்தி, எமது ஊடக சங்கத்தினதும், அதில் பதவி வகிக்கும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத தொழிலுக்காக நாளாந்தம்

# 1,500 படகுகள் படையெடுப்பு



விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, கொக்கிளாய், முகத்துவாரம் பகுதியிலிருந்து நாளாந்தம் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்காக, 1,500க்கும் மேற்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப்படகுகள் முல்லைத்தீவு கடலுக்குள் படை எடுக்கின்றன என, வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம், கடற்றொழில் அமைச்சு என்பன ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றனவா என்றும், அவர் வினவினார்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதிக்கு, நேற்று முன்தினம் (18) சென்ற வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர், அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டனர்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, ரவிகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இந்தப் பயணத்தடைக் காலத்தில் தென்னிலங்கையில் இருந்து வருவதற்கு இவர்களுக்கு அனுமதியை வழங்கியது யார் எனவும் இவ்வாறு தெற்கிலிருந்து மீனவர்கள் வரும் போது, வீதித்தடைகளை ஏற்படுத்தி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர் என்ன பார்த்துக் கொண்டு இருந்தார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

கொக்கிளாய், முகத்துவாரம் பகுதியில் ஏறத்தாள தென்னிலங்கையைச் சேர்ந்த 300 மீனவக் குடும்பங்களே பதிவை மேற்கொண்டு வசித்து வருகின்றன எனத் தெரிவித்த அவர், இந்நிலையில், முகத்துவாரம் பகுதியிலிருந்து ஏறத்தாள 1,500க்கும் மேற்பட்ட படகுகள் சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்காக படையெழுத்துச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது என்றும் கூறினார்.

மேலும், சில சந்தர்ப்பங்களில் கடற்படையினர் சட்டவிரோத தொழிலில் ஈடுபடும் தெற்கைச் சேர்ந்த மீனவர்களின் ஓரிரு படகுகளைக் கைதுசெய்தாலும் இலஞ்சங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவிப்பதாக இங்குள்ள மக்கள் சிலர் தெரிவிக்கின்றனர் என்றும் கூறினார்.

# முத்தமிழ் வித்தகரின் சிரார்த்த தினம்

வா.கிருஸ்ணா, எம்.எஸ்.எம்.நூர்தீன், க.விஜயரெத்தினம்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் சிரார்த்த தினத்தையொட்டி, மட்டக்களப்பு, கல்லடி, இராமகிருஷ்ண மிசனின் வளாகத்திலுள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதியில் நேற்று (19) வழிபாடுகள் நடைபெற்றன.

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, சுவாமி விபுலானந்தர் சமாதியில் மலர் தூவப்பட்டு, விசேட பூஜைகள் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து, மட்டக்களப்பு நகரில் உள்ள திருநீற்றுப் பூங்காவில் உள்ள சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்தா, மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் க.பாஸ்கரன் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.







# 'புலமைப் பரிசில் வழங்கல்'



எம்.எஸ்.எம். ஹனீபா

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 28 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி பெறும் பயனாளிகளின் க.பொ.த உயர் தரம் கற்க தகுதி பெற்ற மாணவர்களுக்கு 'சமுர்த்தி சிப்தொர கல்விப் புலமைப் பரிசில்' வழங்கும் வைபவம், நேற்று (19) நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுஸைன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸான் அதிதியாக கலந்துகொண்டு, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசிலை வழங்கி வைத்தார்.

2020/2022ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரம் கல்வி கற்கும் 124 மாணவர்களுக்கு தலா 1,500 ரூபாய் வீதம் முதல் 10 மாதத்துக்கு 18 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் புலமைப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டதாக, தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுஸைன் தெரிவித்தார்.

புதிய தளபதி

# கடமைகளை பொறுப்பேற்றார்



என்.ராஜ்

யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, பலாலி இராணுவக் கட்டளை தலைமையகத்தில் வைத்து, நேற்று (19) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா, கொழும்பு இராணுவ தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ள நிலையில், கொழும்பு இராணுவக் கட்டளை தலைமையகத்தில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

கொரோனாவை

# கட்டுப்படுத்த ஒத்துழைக்கவும்



என்.ராஜ்

வடக்கில், கொரோனாவை கட்டுப்படுத்த சுகாதார பிரிவினருக்கு ஒத்துழையுங்கள் என, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிகக்கார தெரிவித்தார்

யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஓட்டோக்களை. நேற்று (19) வழங்கி வைத்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், "யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கென 20 ஓட்டோக்களையும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு 20 ஓட்டோக்களையும் வழங்கியுள்ளோம்" என்றார்.

" பொலிஸ் நிலையங்களில் வாகனப் பற்றாக்குறை பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது" எனவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், "வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களில் சில பகுதிகள் முடக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அந்த பகுதிகளில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின் படி சில வேலைத்திட்டங்கள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" என்றார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை

# பணியாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு



எஸ்.றொசேரியன் லெம்பேட்

தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கக் கோரியும், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார சேவைகள் பணியாளர்களும் பரிசோதகர்களும், நேற்று (19) பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம், காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போராட்டக்காரர்கள், 60 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக பணியாளர்கள் மேற்கொண்ட பணிகளுக்கான கொடுப்பனவு இது வரை காலமும் வழங்கவில்லை என தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக பல தடவைகள் எழுத்து மூலமாகவும் தொழிற்சங்க அடிப்படையிலும் பணியாளர்கள் ஒன்றிணைந்து வைத்தியசாலையில் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

"மன்னார் மாவட்டத்தை தவிர வடக்கில் உள்ள ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற பணியாளர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படுகின்றது.

"எனவே தமக்கு சரியான தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் போராட்டம் தொடரும்" எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# காரில் 'ஐஸ்' கடத்தியவர் கைது

கனகராசா சரவணன், எம்.எம்.அஹமட் அனாம்



மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனைக்கு காரில் 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான 100 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்திச் சென்ற பிரபல போதைப் பொருள் வியாபாரி டிலக்ஷன், நேற்று முன்தினம் (18) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவருடன், மேலும் இருவரையும் வாழைச்சேனை, கும்புறுமூலை சந்தியில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து, தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலையிலுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து, கும்புறுமூலைச் சந்தியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனையை நோக்கிப் பயணித்த காரை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 13 இலச்சம் ரூபாய் பெறுமதியான 100 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், பிரபல போதைப்பொருள் வியாபரியான டிலக்ஷன் உட்பட 3 பேரையும் கைது செய்தனர்.

ஹெரோய்னுடன்

# சிறைச்சாலை அதிகாரி கைது

ஏஎம்.கீத்

ஹெறாரோய்ன் போதைப்பொருளுடன் கடமைக்குச் சென்ற திருகோணமலை சிறைச்சாலை அதிகாரி, திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வைத்து நேற்று (19) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, மேற்படி சிறைச்சாலை அதிகாரியை நீண்ட காலமாக நோட்டமிட்ட பொலிஸார், அவரைக் கைதுசெய்ததாகவும் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 14 கிராம் 602 மில்லி கிராம் ஹெறாரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

29 வயதுடைய சிறைச்சாலை அதிகாரி ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர், சிறைக் கைதிகளுக்கு விற்பனை செய்வதற்காகவா போதைப்பொருளைக் கொண்டு சென்றார் என்ற கோணத்தில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

# தடுப்பூசியில் பாராமுகம்

க. அகரன்

வவுனியா நகர சபையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு, கொரோனா தடுப்பூசி வழங்குவதில் அரசாங்கமும் சுகாதாரத்துறையும் பாராமுகமாக செயற்படுவதாக, வவுனியா நகரசபை உறுப்பினர் க.சந்திரகுலசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள், இராணுவம், பொலிஸார் உட்பட பலருக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும், முன்களப் பணியாளர்களாக செயற்பட்டு வருகின்ற எமது சுகாதார ஊழியர்களுக்கு இதுவரை தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை. அண்மையில், இராணுவத்தால் ஆயிரம் தடுப்பூசிகள் வவுனியாவுக்கு வழங்கப்பட்ட நிலையில், அதிலும் எமது ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# விபத்தில் ஒருவர் பலி; சாரதி கைது

ஆ.ரமேஸ்

கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தவலந்தன்னை பகுதியில் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பதுளையை பிறப்பிடமாகவும் லபுக்கலை தோட்டத்தில் வசித்தவருமான, ராமசாமி சுரேஸ் வயது (40) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அத்துடன், பாரவூர்தியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில், லபுக்கலை பகுதியிலிருந்து கண்டியை நோக்கி ஓட்டோவில் இருவர் பயணித்துள்ளதுடன் அவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர்கள் பயணித்த ஓட்டோவும் கொழும்பிலிருந்து நுவரெலியாவை நோக்கி வந்த பார ஊர்தியும் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் ஓட்டோ சாரதி, பலத்த காயங்களுக்கு உள்ளாகி கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மற்றையவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

# குடும்பமொன்றுக்கு வீடமைத்துக் கொடுக்கிறார் அரவிந்தகுமார் எம்.பி

எம். செல்வராஜா

பசறை, எல்டெப் பெருந்தோட்ட கீழ்ப்பிரிவில் குடிலொன்றை அமைத்து, அவல நிலையில் வாழ்ந்து வந்த, இரண்டு சிறுவர்களைக் கொண்ட தொழிலாளர் குடும்பமொன்றுக்கு, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் நேரடியாக சந்தித்து, அவர்களுக்கென தனது சொந்த நிதி மூலம் நிரந்தர வீடொன்றை அமைத்துத் தருவதாக உறுதியளித்தார்.

அதற்கமைய, அக்குடும்பத்துக்கு முதல்கட்டமாக 50,000 ரூபாய் நிதியை வழங்கியதோடு, நிரந்தர புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லையும் நாட்டினர்.

இந்நிகழ்வில், அப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.



# புத்தர் சிலைக்குள் போதைப்பொருள் கடத்திய 'குடு சூட்டி' கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில், போதைப்பொருள்களை விநியோகிக்கும் 'குடு சூட்டி' என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரது காரிலுள்ள புத்தர் சிலைக்கு அடியில் மறைத்து வைத்து, ஐஸ், ஹெரோய்ன் ஆகிய போதைப்பொருள்களைக் கொண்டு சென்ற போதே, சந்தேகநபர் மாத்தளை, எல்வல பிரதேசத்தில் வைத்து, கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை, நாகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்த போது, அவரது காரிலிருந்து 5,720 மில்லி கிராம் ஐஸ், 2,235 மில்லி கிராம் ஹெரோய்ன் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை, மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

# கௌரவம்...

பசறை -அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பிரதம குரு சிவ ஸ்ரீ சிவக்குமார், அவரது சமூக சேவையைப் பாராட்டி, நேற்று முன்தினம் (18) 'ஜனஹிதகாமி கீர்த்தி ஸ்ரீ தேசபந்து லங்கா புத்ர விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

-நடராஜா மலர்வேந்தன்



## டெவன் நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்த யுவதியை

# தேடும் பணிகள் கைவிடப்பட்டன

ஸ்.கணேசன்

டெவோன் நீர் வீழ்ச்சியில் விழுந்து காணாமற் போயுள்ள 19 வயது யுவதியை தேடும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக திம்புளை, பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தனை, டெவோன் நீர் வீழ்ச்சியைத் தனது மூன்று நண்பிகளுடன் பார்வையிடச் சென்ற போது, நேற்று முன்தினம் (18) மாலை, குறித்த யுவதி நீர் வீழ்ச்சியின் உச்சியில் இருந்து கால் தடுமாறி விழுந்து காணாமல் போயுள்ளார்.

யுவதியைத் தேடுவதற்காக, இராணுவத்தினர், கடற்படையினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் மீட்பு பணிகள் நேற்று (19) காலை முதல் இடம்பெற்று வந்த நிலையில், மீட்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக திம்புள- பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர் வீழ்ச்சியின் அடி பகுதியில் பாரிய கற்பாறைகள் உள்ளதாலும், நீர் வீழ்ச்சியில் அதிகளவில் நீர் விழுவதைக் கருத்தில் கொண்டும் மேற்படி யுவதியை தேடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நீர் வீழ்ச்சியிலிருந்து கீழே விழுந்து, காணாமல் போயுள்ள யுவதி லிந்துலை லென்தோமஸ் பகுதியில் வசித்த 19 வயதான மணி பவித்ரா என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## சிறுமி ஹிசாலியின் மரணம்

# மலையகப் பெற்றோருக்கு பாடத்தைப் புகட்டியுள்ளது



குடும்ப வறுமை எல்லா சமூகத்திலும் இருந்தாலும் மலையகத்தில் அது கூடுதலாகவே இருக்கின்ற காரணத்தால் தான் வீட்டு வேலைக்காக பிள்ளைகளை அனுப்பி வைக்கின்றார்கள் என தெரிவித்துள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், "எனினும், படிக்க வேண்டிய வயதில் பணிப் பெண்ணாகச் சென்ற டயகம பிரதேசத்தைச் சேர்ந்த ஹிஷாலினியின் பரிதாப மரணம், மலையகப் பெற்றோருக்கு பாடத்தைப் புகட்டியுள்ளது" என்றார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"குடும்பத்தின் வறுமைதான் காரணம் என்றாலும் வேலைக்கு அனுப்பும் பெற்றோர் அடிக்கடி தொடர்புகொண்டு பிள்ளைகளின் நலன்கள் பற்றி தெரிந்து கொள்வதோடு, தகுந்த முறையில் கண்காணிப்பையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சிறுமியின் மரணம் எடுத்துக் காட்டுகின்றது.

"இந்தச் சம்பவத்துக்குப் பிறகு பிள்ளைகள் வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்லமாட்டார்கள் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. ஆனால், பெற்றோர் மிகவும் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும் என்பது புலனாகின்றது. படிக்க வேண்டிய வயதில் உள்ள பிள்ளைகள் வேலைக்குச் செல்லுகின்ற அவல நிலை இனிமேலும் தொடராமல் இருப்பதற்கு பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆறு மாதங்களுக்கு விட்டுக்கொடுக்கவும்

## தொழில் முனைவோர் பெண்கள் அமைப்பு வேண்டுகோள்

பாலித ஆரியவன்ஸ



பதுளை, சேனாநாயக்க மைதானத்தில் உள்ள விவசாயத்துறை அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும், 'ஹெலபோஜுன்' எனப்படும் தேசிய உணவகங்களின் தொழில் முனைவோரை அப்புறப்படுத்தி விட்டு, புதிய தொழில் முனைவோருக்கு அதனை வழங்க ஊவா விவசாய பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தால் எடுத்த தீர்மானத்தை உடனடியாக மாற்ற வேண்டுமென தேசிய உணவு தொழில்முனைவோர் பெண்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில், பதுளை மாவட்ட பிரதி பணிப்பாளரிடம் வினவியபோது, குழுக்களாக இவர்களது இரண்டு வருட பயிற்சி காலம் நிறைவடைந்துள்ளது. எனவே, புதிய தொழில் முனைவோருக்கு அதற்கான பயிற்சியை வழங்கவே இவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார்.

எனினும், 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல், அதன் பின்னரான கொரோனா நிலைமையால், தம்மால் வருமானங்கள் எதையும் ஈட்ட முடியாது போயுள்ளதென இங்குள்ள 40 பெண் தொழில் முனைவோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இங்கிருந்து சென்று, வேறு இடங்களில் 40 சுயதொழில் வேலைகளை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான இடங்களைத் தேடிக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டதுடன், இடங்கள் கிடைத்தாலும் அவற்றுக்கு முற்பணம் செலுத்த முடியாதிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, குறித்த இடத்தில் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க 6 மாதங்கள் மேலதிகமாக வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹெலபோஜுன் ஹலே விவசாய பெண்கள் அமைப்பு எனும் பெயரில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இவர்கள், தமது பிரச்சினைகள் குறித்து, விவசாயப் பணிப்பாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன், தமது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உதவிக்கரம்...






எம்.செல்வராஜா

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்காதேவி தேவஸ்தான அறக்கட்டளை நிதியத்தால், பதுளை பிரதேசத்தின் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த 10 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பதுளை விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று (19) இந்த உலர் உணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.



## ஹிசாலினியின் மரணம் தொடர்பில்

# சட்ட ரீதியாக அணுகத் தயார்

## மனித அபிவிருத்தி ஸ்தாபனம் தெரிவிப்பு

ஆ.ரமேஸ்



சிறு வயதில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட 16 வயதான டயகமயைச் சேர்ந்த சிறுமி ஜூட் ஹிசாலினியின் மரணம் தொடர்பாக, மனித அபிவிருத்தி ஸ்தாபனமானது, மனித உரிமை ஆணைக்குழு மற்றும் தேசிய சிறுவர் உரிமை அதிகார சபை ஆகியவற்றில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை தொடர ஏற்பாடுகளை செய்துள்ளதாக, குறித்த ஸ்தாபனத்தின் தலைவர் பி.பி. சிவபிரகாசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர்,

இந்தச் சிறுமியின் மரணம், கொலையா அல்லது தற்கொலையா எனச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. அதேநேரத்தில், சிறுவர் உரிமை சட்டம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் அறிந்திருக்கவில்லையா அல்லது சட்டத்தை மீறி, சிறுமியைப் பணிக்கு அமர்த்திருந்தாரா என்ற விடயமும் இன்று பேசும் பொருளாகியுள்ளது.

எனவே, சிறுமியின் குடும்பத்தார் மனித அபிவிருத்தி ஸ்தாபன உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்ட விடயங்களின் பிரகாரம், சிறுமியின் மரணத்துக்கு நீதி கிடைக்கும் வகையில், மனித அபிவிருத்தி தாபனம் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தியுள்ளது.

அத்துடன், எமது ஸ்தாபனத்தின் ஊடாக, மனித உரிமை ஆணைக்குழு, தேசிய சிறுவர் உரிமை அதிகார சபை ஆகியவற்றில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை தொடர ஏற்பாடுகளை செய்துள்ளது என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

> **சிறுமியின் மரணம், கொலையா அல்லது தற்கொலையா எனச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. அதேநேரத்தில், சிறுவர் உரிமை சட்டம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் அறிந்திருக்கவில்லையா அல்லது சட்டத்தை மீறி, சிறுமியைப் பணிக்கு அமர்த்திருந்தாரா என்ற விடயமும் இன்று பேசும் பொருளாகியுள்ளது**

## பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு

# DNA Extractor இயந்திரம்

## செந்தில் தொண்டமான் நிதியுதவி

பதுளை மாவட்ட வைத்தியசாலையில் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகுபவர்களைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்வது, பரிசோதனை முடிவுகளை பெற்றுக்கொள்வதில் பாரிய தாமதங்கள் ஏற்பட்டு வந்த நிலையில், இதற்குத் தீர்வாக DNA Extractor இயந்திரமொன்று, வைத்தியாலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தின் தேவை குறித்து, சுகாதார அமைச்சிடம் பல தடவை வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எனினும், இதைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தை தொடர்ந்து, இது தொடர்பாக பதுளை மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் பாலித்த ராஜபக்ஷவால், பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய, தமது சொந்த நிதியிலிருந்து 2.5 மில்லியன் நிதியை செந்தில்தொண்டமான்வழங்கியுள்ளார்.



> **கொவிட்-19 தொற்றாளர்களின் பரிசோதனை முடிவுகளை பெற்றுக்கொள்வதில் பாரிய தாமதங்கள் ஏற்பட்டு வந்த நிலையில், DNA Extractor இயந்திரமொன்று, வைத்தியாலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது**

# வெள்ளம் வரும் முன்னர் அணை கட்டுவதே சிறந்த ‘விவசாயி’இன் பண்பு

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணியாற்றிய பணிப்பெண் ஹிஷாலினி ஜூட் குமார், டயகமவைச் சேர்ந்த சிறுமி, கடந்த மூன்றாம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு, 12 நாள்களின் பின்னர் மரணமடைந்துள்ளார். இறப்பதற்கு முன்னர், தனது உடலில் மண்ணெண்ணை ஊற்றித் தீவைத்ததாக சிகிச்சையளித்த மருத்துவர்களிடம் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சிறுமி 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி பிறந்துள்ளார். அவர் 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில், பாராளுன்ற உறுப்பினரின் வீட்டில் பணிபுரிய, அவரது பெற்றோர்களால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு 15 வயது மட்டுமே ஆகியிருந்தது.

இந்தப் பெண் நீண்ட காலமாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்ததாகவும் அதை மையப்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும் பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுப் பணிப்பெண்கள், வீட்டு எஜமானர்களால் வன்முறைகளுக்கு உள்ளாவதும் வீட்டில் இடம்பெற்ற விபத்தில் பணிப்பெண் இறந்து விட்டதாகவும் கூறப்பட்ட பல சம்பவங்கள், கடந்த காலங்களில் செய்திகளாக நமது காதுகளை எட்டியிருந்தன. ஆனால், அவை எவற்றுக்கும் அளிக்கப்படாத முக்கியத்துவத்தை ஹிஷாலினியின் மரணத்துக்கு அரசாங்கமும் சிங்கள ஊடகங்களும் அளித்துவருகின்றன. அதற்கு முக்கிய காரணம், இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பது, இவர்கள் விரும்பாத அரசியல்வாதியாகவும் சிங்கள-பௌத்த மக்கள் மத்தியில் ‘தேசத்துக்கு ஆபத்தானவர்’ என உருவகிக்கப்படும் ஒரு முஸ்லிம் அரசியல்வாதியின் வீட்டில் என்பதாலாகும்.

இந்தச் சிறுமியின் இறப்புக்கான காரணம், ரிஷாட் பதியுதீன் என்பதாகவே பிரசார பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. ரிஷாட், 2020 ஒக்டோபர் 19ஆம் திகதி கைது செய்யப்பட்டு, நவம்பர் 25ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். மீண்டும், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டு, இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இப்போது, ஹிஷாலினியின் மரணம், அரசியலாக்கப்பட்டு உள்ளது.

ஆனால், 15 வயது கூட நிறைவடையாத ஒரு சிறுமியை வீட்டு வேலைக்காகப் பணிக்கமர்த்தியது, சமூகப் பொறுப்பற்ற செயலாவதுடன் சட்டத்தின் முன் தண்டனைக்குரிய குற்றச் செயலுமாகும்.

மலையகம், வடக்கு-கிழக்கு பகுதிகளில் நிலவும் ஏழ்மையைப் பயன்படுத்தி, வீட்டு வேலைகளுக்காக நகரப்பகுதிகளுக்கு சிறுமிகளை அழைத்துவரும் முகவர்கள், தரகுப் பணத்துக்காக பொய்புரட்டுகளைக் சொல்லி, ஏதோ ஒரு வீட்டில், யாரோ ஒரு சிறுமியைத் தள்ளிவிட்டுச் சென்றுவிடுகின்றார்கள். இந்தச் சிறுமி என்ன வேலை செய்கிறாள், எப்படி இருக்கிறாள் என்பது குறித்து எவருக்கும் தெரியாது. இத்தகைய சூழ்நிலைகளே வீட்டுப் பணிப்பெண்கள் மீதான வன்முறைகளுக்கும் சிறுமிகள் வேலைக்குச் சேர்க்கப்படவும் காரணங்களாக அமைகின்றன.

வீட்டுப் பணிப்பெண்களுக்கான சந்தையைக் கண்காணிப்பதற்கோ, நெறிப்படுத்துவதற்கோ எந்த அமைப்புகளும் இல்லை. எனவே, அரசாங்கம் தனது நிறுவனங்கள் ஊடாக, உடனடியாகப் பணிப்பெண்களின் சமூகப் பாதுகாப்பையும் தொழில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில், தவறுகள், சம்பவங்கள் நடப்பதற்கு முன்னர், அதைத் தடுக்கும் வகையிலான சட்டதிட்டங்களை வகுத்திருப்பதே சிறந்த அரசாங்கத்தின் அம்சமாகும்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

பெரும் மக்கள் கூட்டத்தை வழிபாட்டுத் தலங்களில் காணும் போது, குதூகலமாக இருக்கும். எம்மைப் போல மாந்தர்கள் ஒன்று கூடுவது, ஓர் இணைப்பாகும். ஒன்றாக இரசிப்பது, ஒருவரை மட்டுமல்ல அனைத்து மக்களையும் ஒன்றாக விரும்புவது போன்ற சந்தர்ப்பம், மானுட நேயத்தை அன்பு செலுத்த வழி சமைக்கின்றது. மக்களைக் காணாமல், எப்பொழுதும் ஓரிருவரை மட்டுமே பார்த்துக் கொண்டேயிருக்க முடியுமா?

சின்னக்குழந்தைகள் எல்லோருமே பலருடன் நேயத்துடன் பழக விரும்புகின்றார்கள். இவர்களிடையே பேதம் இல்லை. எவரைக் கண்டாலும் சிரிப்பார்கள். அதுமட்டுமல்ல, தங்களோடு இணைத்து விளையாடவும் விரும்புவார்கள்.

ஆனால், பராயம் முதிரும் போது இயல்புகளும் மாறுகின்றன. என்றும் யாவரையும் நேசிக்கும் கலையைப் பெற்றோர், சுற்றத்தினர் ஊட்டி வளர்க்க வேண்டும். அந்தக் குழந்தை மனம் எப்போதும் அழகு.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மாடு அறுப்பு ஒரு பிரச்சினையா?

மொஹமட் பாதுஷா

சின்னச்சின்ன விவகாரங்கள், ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் தேசிய பிரச்சினைகள்போல காண்பிக்கப்படுவதும், பெரிய குழப்பங்கள், நெருக்கடிகளை மூடிமறைத்து, மக்களைத் திசை திருப்புவதற்கு அற்பத்தனமான விடயங்களை உருப்பெருப்பித்துக் காண்பிப்பதும், இலங்கை அரசியல் சூழலில் புதியதல்ல. இதற்கு முஸ்லிம்களே அண்மைக் காலத்தில் அதிகம் பலிக்கடாவாக்கப்பட்டு வருகின்றார்கள்.

முஸ்லிம்கள் ஹஜ்ஜூப் பெருநாளைக் கொண்டாடவுள்ள நிலையில், பள்ளிவாசல் வளாகங்களில் மாடுகளை அறுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, அமைச்சரவைத் தீர்மானத்துக்கு ஒத்திசையும் விதத்தில், பொதுவாகவே மாடறுப்பைத் தடுப்பதற்கு அரசாங்கம் எத்தனங்களை எடுத்து வருகின்றது. இது, முஸ்லிம்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹஜ்ஜூப் பெருநாள் நாள்களில், முஸ்லிம்கள் மாடு அல்லது ஆட்டை அறுத்து, அந்த இறைச்சியை ஏனையோருக்குத் தானமாக வழங்குகின்றார்கள். இதற்குப் பின்னால், மத ரீதியான வரலாற்றுக் கதையுள்ளது. ஆனால், பெருநாள் தினத்தில், ஏழை மக்கள் பசியுடன் இருக்கக் கூடாது என்பது, இதன் தார்ப்பரியமாகும்.

இந்நிலையில், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது, பள்ளிவாசல் வளாகங்களில், மாடுகளை இறைச்சிக்காக அறுப்பதைத் தடை செய்திருக்கின்றது. இதுகூட விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. ‘யானை அடிப்பதற்கு முன்னதாக, தானே அடித்துக் கொள்கின்ற செயற்பாடு’ இது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி திணைக்கள பணிப்பாளர் அளவுக்கதிகமாக அதிகாரத்தை கையிலெடுத்துக் கொள்கின்றார் என்று குறிப்பிட்டுள்ள ஓரிரு முஸ்லிம் அரசியல்வாதிகள், எனவே இவ்வறிவிப்பை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், கொரோனா வைரஸ் பரவல் நிலைமையைக் கருத்தில் கொண்டும், மாடறுப்பு தடைச்சட்டம் கொண்டு வரப்படுவதற்கு ஏதுவான களநிலையை நாமே ஏற்படுத்திக் கொடுத்து விடக் கூடாது என்பதற்காகவுமே, முன்கூட்டியே இவ்வறிப்பை விடுத்ததாக ‘வக்பு’ சபையின் தலைவர் பின்னர் விளக்கமளித்து இருக்கின்றார்.

இலங்கையில் முஸ்லிம்களை வழிப்படுத்துகின்ற சபைகள் எடுக்கின்ற எல்லாத் தீர்மானங்களும் நகர்வுகளும், சரி என்று கூற முடியாது. முக்கியமான தருணங்களில் பல சபைகள், அமைப்புகள் செயற்பாட்டுக் களத்தில் காணாமல் போய்விடுவதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஜம்மியத்துல் உலமா சபை, வக்பு சபை, முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் போன்றவை, சில தருணங்களில் சற்றுத் தைரியமான முடிவையும் எடுக்க வேண்டும். எல்லா விடயங்களிலும் ‘அவர்களை’ திருப்திப்படுத்த முடியாது. ஆனால், அதற்கான அரசியல்சார் பலமும் நெஞ்சுரமும், முஸ்லிம் சமூகத்துக்குள் இல்லை என்பதே நிதர்சனமாகும்.

எது எவ்வாறிருப்பினும், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் விதித்துள்ள இத்தடையில், நிறையவே நியாயங்கள் இருப்பதைக் காணலாம். கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காரணமாக, இரண்டரை மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த பள்ளிவாசல்கள், தற்போதுதான் சுகாதாரக் கட்டுப்பாடுகளின் கீழ் திறக்கப்பட்டுள்ளன. பெருநாள் தினத்தில், பயணத்தடையோ, முடக்கமோ விதிக்கப்படுவதற்கும் வாய்ப்பிருக்கின்றது.

இந்நிலையில், பிராணிகளை அறுப்பதற்காகப் பள்ளிவாசல்களுக்குள் கூடுவதன் ஊடாக, தேவையற்ற சிக்கல்கள் ஏற்படலாம். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் புகுந்து, அன்டிஜன் பரிசோதனை செய்து, 10 பேருக்கு ‘பொசிடிவ்’ என்றால், அந்தத் தொற்றாளர்களுக்கு ‘பள்ளிவாசல் கொத்தணி’ என்றே பெயர் வைத்து விடுவார்கள்.

எனவே, யதார்த்தங்களின் அடிப்படையில் சிந்தித்தால், இந்த முடிவில் சற்று விவேகமும் கலந்துள்ளமை புலனாகின்றது. அதற்காக முஸ்லிம்களை வழிப்படுத்தும் தரப்பினர் எடுக்கின்ற எல்லா நகர்வுகளையும், புத்திசாலித்தனமானவை எனச் சொல்ல வரவில்லை.

ஆனால், இலங்கையில் இறைச்சிக்காக மாடுகள் அறுப்பதை முற்றாகத் தடை செய்வதற்கு, அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளில் எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, முஸ்லிம் சமூகத்தை நோக்கிய இன்னுமோர் அநியாயமாகவே இதுவும் தெரிகின்றது.

இலங்கையில் மாடுகளை உணவுக்காக அறுப்பதைத் தடை செய்வதற்கான முயற்சிகள், நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றன. இனவாத அமைப்புகள் இதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்து வந்த நிலையில், பின்னர் அதே கொள்கையுடன் சில அரசியல்வாதிகள் அதிகாரத்துக்கு வந்ததால் அரசாங்கத்திலுள்ள சிலர் இதில் குறியாக இருக்கின்றனர்.

இப்போது, சமூக வலைத்தளங்களில் ஒரு கடிதம் பகிரப்பட்டுள்ளது. அதாவது, பிராணிகளை அறுப்பதைத் தடைசெய்யும் சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளதாலும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாலும், அந்தத் தீர்மானத்துக்கு அமைவாகச் செயற்படுமாறு, உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளதாக அறிய முடிகின்றது.

இந்தக் கடிதம், அதிகாரபூர்வமானதும் உண்மையானதும் என்றால், இவ்வறிவிப்பு கொஞ்சம் கூட ஏற்றுக் கொள்ள முடியாததும், முஸ்லிம்கள் மீதான வெறுப்புணர்ச்சியின் இன்னுமொரு வடிவமாகவுமே அமையும்.

இங்கு, கவனிக்கப்பட வேண்டிய மூன்று விடயங்கள் உள்ளன.

ஒன்று, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பு தற்காலிகமானதாகும். கொரோனா வைரஸ் பரவலைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும். அமைச்சரவைத் தீர்மானத்தை மேற்கோள்காட்டி, இதை நீடிக்க அரசாங்கம் எண்ணக்கூடாது.

ஏனெனில், அமைச்சரவைத் தீர்மானங்கள், சட்டமூலமாக வரையப்பட்டு, அது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பின்னரே சட்ட அந்தஸ்தைப் பெறும். இது, இரவோடிரவாக நடந்து விடுகின்ற காரியமல்ல. அப்படிச் செய்ய முடியுமென்றால், அதை எப்போதோ செய்திருப்பார்கள்.

எனவே, பழைய அமைச்சரவை முடிவுகளைச் சொல்லி, உள்ளூராட்சி சபைகளின் ஊடாக, நிழல் சட்டமொன்றை அமல்படுத்த முனையக் கூடாது. அமைச்சரவையில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை, சட்டத்தைப் போல அமல்படுத்த ஒவ்வோர் அதிகாரத் தரப்பும் நினைத்தால், ஒவ்வொரு வாரமும் ஏகப்பட்ட அறிவிப்புகளை விடுக்க வேண்டி வரும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இரண்டாவது விடயம், முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில், மாட்டிறைச்சி சாப்பிடுவது, அவர்களது மார்க்கக் கடமையல்ல; அது அவர்களது வழக்கமாகும். சிங்கள மக்களுக்குப் பருப்புக் கறி போல, முஸ்லிம்களின் உணவில் இறைச்சி இடம்பிடித்துள்ளது. எனவே, பருப்பைத் தடை செய்தால், சிங்கள மக்களின் உணர்வு எப்படி மேலெழும் என்பதை, ஆட்சியாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மூன்றாவது விடயம் முக்கியமானது. மாடுகளை அறுத்து விற்பதும், உண்பதுமே முஸ்லிம்கள் என்றாலும், மாடு சார்ந்த வர்த்தகம் பெரும்பாலும் சிங்கள மக்களைச் சார்ந்ததாகும். மாட்டுப் பண்ணைகள் சிங்களப் பிரதேசங்களிலேயே அதிகளவில் காணப்படுகின்றன.

சில தமிழர்களும் விற்பனைக்காக மாடு வளர்க்கின்றனர். இலட்சக்கணக்கான மாடுகள் இவ்வாறு அறுவைக்காக வளர்க்கப்படுகின்றன.

ஆகவே, இந்த மாடறுப்புத் தடை அமலுக்கு வந்தால், சிங்கள பண்ணையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். தற்போதிருக்கின்ற மாடுகளை என்ன செய்வது எனத் தெரியாத நிலை உருவாகும். அத்துடன், மாடுகள் வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரிந்து, உணவின்றி, நீரின்றி வீதிகளில் செத்துக் கிடக்கும் என்பதை, ஏற்கெனவே ஆய்வாளர்கள் சொல்லி விட்டார்கள்.

இந்த இடத்தில், ஒன்றைக் கவனிக்க வேண்டும். அரசாங்கம் மாடுகளை அறுப்பதற்கு தடை விதிக்க முனைகின்றதே தவிர, இறைச்சியைச் சாப்பிடுவதற்குத் தடை விதிப்பதாகக் கூறவில்லை. எனவே, கம்பனிகளைப் பதிவு செய்து, அதனூடாகக் கண்ணுக்குத் தெரியாத ஒரு தேசத்தில் அறுக்கப்பட்ட மாட்டிறைச்சியை அல்லது, மாட்டிறைச்சி என்று சொல்லப்படும் ஒருவகை இறைச்சியை இறக்குமதி செய்யும் மறைமுகத் திட்டம் இருக்கின்றதா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

உண்மையில், நாட்டில் இப்போதிருக்கின்ற பிரச்சினைகள், நெருக்கடிகளுடன் ஒப்பிடுகையில் இதுவெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை.

எனவே, பிராணிகளை அறுக்கின்ற விடயத்தை, ஒரு முக்கியத்துவம்மிக்க விவகாரமாகக் காட்சிப்படுத்தி, இன்னும் குழப்பங்களை ஏற்படுத்துவதை விடுத்து, மாடு அறுக்கும் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் ஒப்பீட்டளவில் நல்ல பெறுபேறுகள் கிடைக்கலாம்.

## கடிதங்கள்

### 40 வருடங்களாகத் திருத்தப்படவில்லை

### வீதியின் விதி



முல்லைத்தீவு, வன்னி விளாங்குளம் முதல் மூன்றுமுறிப்பு வரையான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் காணப்படுவதால், கொம்பு வைத்த குளம், பாலைப்பாணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியின் வன்னிவிளாங்குளம் சந்தியிலிருந்து, பாலைப்பாணி, கொம்பு வைத்தகுளம் ஊடாக மூன்றுமுறிப்பு சந்தி வரை செல்லும் 20 கிலோ மீற்றர் நீளமான வீதி, கடந்த 40 வருடங்களுக்கும் மேலாகப் புனரமைக்கப்படாத நிலையில், குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் வீதியின் இரு மருங்கிலும் பற்றைக்காடுகள் வளர்ந்துள்ளன.

இவ்வாறான நிலையில், குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகவே இவ்வீதி காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ள மக்கள், குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர். இது தொடர்பான கோரிக்கையை மாந்தை கிழக்கு பிரதேச செயலகம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு என்பவற்றுக்கு தொடர்ச்சியாக கடந்த 10 வருடங்களாக முன்வைத்து வருகின்ற போதும், இந்த வீதியைப் புனரமைப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

-யது பாஸ்கரன்

சென்னை


மூன்றாவது அலை

# பொது மக்கள் நம்ப வேண்டாம்

மூன்றாவது அலை தொடர்பாக, சமூக ஊடகங்களில் வரும் தகவல்களை, பொது மக்கள் நம்ப வேண்டாம்' என, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் கூறினார்.

சென்னை, சின்னமலை, புனித பிரான்சிஸ் சேவியர் பள்ளியில், தடுப்பூசி முகாம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதை, அமைச்சர் சுப்பிரமணியன் ஆரம்பித்து வைத்தார். இதன்பின்னர், அமைச்சர் கூறியதாவது: தனியார் நிறுவனங்கள், வியாபாரிகள், கர்ப்பிணிகள் என, அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த, சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. அடுத்த கட்டமாக, ஆன்மிகம், சுற்றுலா தலங்களில் சிறப்பு கவனம் செலுத்தி, தடுப்பூசி செலுத்தப்படும்.


திருவண்ணாமலை,



ராமேஸ்வரம், நாகூர், வேளாங்கண்ணி போன்ற ஆன்மிக தலங்கள் அமைந்துள்ள பகுதியில், தடுப்பூசி செலுத்த, அங்குள்ள மாவட்ட கலெக்டர்களிடம் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் , தமிழகத்துக்கு 1கோடி 80இலட்சம் தடுப்பூசிகள் வழங்கியுள்ளது. எதிர்க்கட்சி தலைவர் இ.பி.எஸ்., இரண்டு நாள்களுக்கு முன், 30 இலட்சம் தடுப்பூசி வந்ததாகவும், அதை பயன்படுத்துவதில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகவும், உண்மைக்கு புறம்பான செய்தியை தெரிவித்துள்ளார்.








# மாஸ் காட்டும் தனுஷ்




தமிழ் சினிமாவின் மூத்த ஜாம்பவான்களை பின்னுக்கு தள்ளி டுவிட்டரில் அதிக பின்தொடர்பவர்களை பெற்று தனுஷ் சாதனை செய்துள்ளார்.

தனுஷ் டுவிட்டரில் ஒரு கோடி பின்தொடர்பவர்களை பெற்றுள்ளார். கோலிவுட் திரையுலகில் ஒரு கோடி பின்தொடர்பவர்களை பெற்ற முதல் நடிகர் தனுஷ் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

கோலிவுட் திரையுலகை பொறுத்தவரை கமல்ஹாசன் 60 இலட்சம், ரஜினி 59 இலட்சம், விஜய் 32 இலட்சம் பின்தொடர்பவர்களை வைத்துக் கொண்டுள்ளனர்.

இதனை அடுத்து தனுஷ் ரசிகர்கள் இதனை சமூக வலைதளங்களில் கொண்டாடி வருகின்றனர்.

சந்திராபூர்

மகளைத் தாக்கிய

## சிறுத்தையை விரட்டிய தாய்

மஹாராஷ்டிராவில் வனப்பகுதி ஒன்றில் தனது ஐந்து வயது மகளைத் தாக்கிய சிறுத்தையை, சிறுமியின் தாய் துணிச்சலுடன் மூங்கில் கம்பால் அடித்துத் துரத்தியுள்ளார். இச்சம்பவத்தில் சிறுமிக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

மஹாராஷ்டிரா மாநிலம் சந்திராபூர் மாவட்டத்திலுள்ள வனப்பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் உள்ளது. அந்த வனப்பகுதி வழியாக ஜூனோனா என்னும் கிராமத்தை சேர்ந்த தாய் தனது 5 வயது மகளுடன் சென்றுகொண்டிருந்தார். அப்போது சிறுத்தை திடீரென சிறுமியைத் தாக்க முயற்சித்தது. அதிர்ச்சியடைந்த தாய் அர்ச்சனா, முதலில் அச்சமடைந்தாலும், மகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற துணிச்சலுடன் அங்கிருந்த மூங்கில் கம்பை எடுத்து சிறுத்தையை தாக்கியுள்ளார். இதனால், சிறுமி மீதான தாக்குதலை விடுத்து அர்ச்சனாவின் பக்கம் சிறுத்தை திரும்பியது. இருந்தும் விடாமல் மூங்கிலால் சிறுத்தையை அடித்து துரத்தினார்.

சபரிமலை

சபரிமலை தரிசனத்துக்கு

## பத்தாயிரம் பேருக்கு அனுமதி



சபரிமலையில் தினசரி தரிசனத்துக்கு அனுமதிக்கப்படும் பக்தர்களின் எண்ணிக்கை 10 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதென அதன் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். கேரள மாநிலம் சபரிமலையில் ஐயப்பன் கோவிலில் தற்போது ஆடி மாத பூஜை நடக்கிறது. ஐந்து மாத இடைவெளிக்கு பின் தினமும் 5,000 பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். தடுப்பூசி செலுத்திய சான்றிதழ், 48 மணி நேரத்துக்கு உட்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர்., சான்றிதழ்களுடன் 'ஒன்லைன்' முன்பதிவு மூலம் பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். முதலில் அறிவிக்கப்பட்ட முன்பதிவு முழுமையாக முடிவடைந்த நிலையில் ஏராளமான பக்தர்கள் சபரிமலை வர விருப்பம் தெரிவித்து தேவசம்போர்டுக்கு தகவல் அனுப்பினர்.

இதைத் தொடர்ந்து, நேற்று முதல் தினமும் 10,000 பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். கூடுதலாக அனுமதிக்கப்பட்ட பக்தர்களும் கொரோனா தடுப்பு நெறிமுறைகளை கடைப்பிடித்து உரிய சான்றிதழ்களுடன் வர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு ள்ளது.



## 'சூர்யா 40' குறித்து சூப்பர் அப்டேட்

சூர்யா எதிர்வரும் 23ஆம் திகதி தனது பிறந்த நாளை கொண்டாட இருக்கும் நிலையில் சன் பிக்சர்ஸ் நிறுவனம் தனது சமூக வலைதளப் பக்கத்தில் 'சூர்யா 40' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் ஜூலை 22 ஆம் திகதி மாலை 6 மணிக்கு வெளியாகும் என அறிவித்துள்ளது.

இதனை அடுத்து சூர்யா ரசிகர்கள் உற்சாகமாக உள்ளனர். சூர்யா ஜோடியாக பிரியங்கா அருள்மோகன் நடித்துள்ள இந்த திரைப்படத்துக்கு டி இமான் இசையமைத்து உள்ளார். பாண்டிராஜ் இயக்கி வரும் இந்தத் திரைப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் பிரம்மாண்டமாக தயாரித்து வருகிறது.

தற்போது 'சூர்யா 40'படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பு காரைக்குடியில் நடைபெற்று வருகிறது.



'பாரீஸ் பாரீஸ்' ரிலீஸ் எப்போது?

## 'எனக்கே தெரியாது'

பொலிவுட் திரையுலகில் கங்கனா ரனாவத் நடித்த சூப்பர் ஹிட் திரைப்படம் 'குயின்'. இந்தத் திரைப்படம் தமிழிலும் 'பாரிஸ் பாரிஸ்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டது. கங்கனா ரனாவத் கேரக்டரில் நடிகை காஜல் அகர்வால் நடித்திருந்தார்.

படப்பிடிப்பு மற்றும் போஸ்ட் புரடொக்ஷன் பணிகள் முடிவடைந்து கடந்த 2018ஆம் ஆண்டு வெளியீட்டுக்கு தயாரானது. ஆனால் சென்சார் உள்பட ஒரு சில பிரச்சனைகள் காரணமாக இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் அண்மையில் அளித்த பேட்டியில் நடிகை காஜல்அகர்வால் இந்தத் திரைப்படத்தின் ரிலீஸ் குறித்து கேட்டபோது 'பாரிஸ் பாரிஸ்' திரைப்படம் எப்போது ரிலீசாகும் என்று எனக்கே தெரியாது என்று கூறியுள்ளார்.

புதுடெல்லி

## பாராளுமன்றுக்கு குடை பிடித்தவாறு வந்தார் பிரதமர்

பிரதமர் நரேந்திர மோடி பாராளுமன்றத்துக்கு வரும் போது மழை பெய்து கொண்டிருந்தது. இதனால், அவரே தனது குடையைப் பிடித்தபடி வந்தார். உதவியாளர்கள் யாரையும் பிரதமர் குடை பிடிக்க அனுமதிக்கவில்லை.

கொரோனா தடுப்பூசி போட்டால் அவர்கள் 'பாகுபலி போல் பலம்' பெறலாமென இந்தியப் பிரதமர் மோடி கூறியுள்ளார். பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்றுக் காலை ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரில் பங்கேற்க வந்த பிரதமர் மோடி, பாராளுமன்ற வளாகத்தில் நிருபர்களிடம் பேசியதாவது:

'ஊடகவியலாளர்கள் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசி போட்டிருப்பீர்கள் என நம்புகிறேன். கொரோனா தடுப்பூசி போட்டு கொண்டால் பாகுபலியாக மாறலாம்' எனவும் தெரிவித்தார். இந்தியாவில் 40 கோடிக்கும் மேற்பட்டோர் தடுப்பூசி போட்டுக்கொண்டு, பாகுபலி போன்று வலிமையாக உள்ளனர். கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அனைவரும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.



சென்னை

கொரோனா மூன்றாவது அலையை

## கட்டுக்குள் கொண்டுவந்தவர்களுக்கு விருது



உலகத் தமிழ் வர்த்தக சங்கம், உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு இணைந்து நடத்திய ஐந்தாம் ஆண்டு மெடிக்கல் எக்சல்லேன்ஸ் விருது-2021 (5TH ANNUAL MEDICAL EXCELLENCE AWARDS -2021) சென்னை லீ மெரிடியன் விடுதியில் நடைபெற்றது. இதில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் ஆலோசனையில் கொரானா மூன்றாவது அலையை கட்டுக்குள் கொண்டுவந்த, அரசாங்க மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவு தொழிலாளர்கள், அம்புலன்ஸ் சாரதிகள், பொலிஸ் உள்ளிட்ட கொரானா ஒழிப்பு போர்க்கால வீரர்களுக்கு விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் தமிழக மக்கள் நலவாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் கலந்துகொண்டு அனைவருக்கும் விருது வழங்கி சிறப்புரை ஆற்றி னார். இதில் தமிழ்நாட்டின் அரசாங்க மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# பட்டதாரி நடிகைகள்

தமிழ் திரையுலக பிரபல நடிகைகள் பலரும் பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரி ஆக உள்ளனர். .

லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றுள்ளார்.

சாய் பல்லவி, எம்.பி.பி.எஸ் டொக்டர் ஆவார்.

சமந்தா, வர்த்தகப் பட்டதாரி. இவர் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் தான் பட்டப்படிப்பை முடித்தார்.

ராஷ்மிகா மந்தனா, உளவியல், ஊடகவியல் மற்றும் ஆங்கில இலக்கியத்தில் பட்டதாரி படிப்பை முடித்துள்ளார்.

காஜல் அகர்வால், முதுநிலை பட்டதாரி. இவர் மாஸ் மீடியா பட்டதாரி படிப்பை முடித்துவிட்டு அதன்பின் மார்க்கெட்டிங் படிப்பில் எம்.பி.ஏ முடித்து உள்ளார்.

நடிகை தமன்னாவும் ஒரு பட்டதாரி. மும்பையில் அவர் தனது பட்டப்படிப்பை முடித்து உள்ளார். நடிகை சுருதிஹாசன், உளவியல் பட்டம் பெற்றவர்.

ஸ்ரேயா சரண், டெல்லியில் ஸ்ரீராம் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்து உள்ளார்.







பாகிஸ்தான்

கடத்தல் தொடர்பில்

# தூதுவர், இராஜதந்திரிகளை மீள அழைத்த ஆப்கானிஸ்தான்

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திலுள்ள தமது தூதுவர் நஜிப் அலிகிஹில், இராஜதந்திரிகளை ஆப்கானிஸ்தான் மீள அழைத்துள்ளதாக ஆப்கானிஸ்தான் வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

அலிகிஹில்லின் மகள் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்டதை அடுத்தே இந்நகர்வு இடம்பெற்றுள்ளது.

அடையாளம் தெரியாத தாக்குதலாளிகளால் சில மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அலிகிஹில்லின் மகளின் உடலில் காயங்களும், கயிற்றின் அடையாளங்களும் காணப்பட்டிருந்தன.

இந்நிலையில், இச்சம்பவத்தை விசாரிப்பதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



Social Media



## சுதந்திர தினம்

பிரித்தானியாவில் கொரோனா கட்டுப்பாடுகள் நேற்று (19) நள்ளிரவில் தளர்த்தப்பட்ட நிலையில், சுதந்திர தினம் என சிலரால் வர்ணிக்கப்பட்டு, அந்நாட்டுத் தலைநகர் இலண்டனிலுள்ள கிளப் ஒன்றில் நடனமாடுகின்றனர்.

ரஷ்யா

கப்பலை அடிப்படையாகக் கொண்ட

# ஹைப்பர்சொனிக் ஏவுகணை சோதனை



ரஷ்யாவானது ஸிர்கோன் ஹைப்பர்சொனிக் ஏவுகணையை சோதித்ததாகவும், பரென்ட்ஸ் கடற்கரையிலிருந்த 350 கிலோ மீற்றர் தூர இலக்கொன்றைத் தாக்கியதாக, ரஷ்ய பாதுகாப்பமைச்சு நேற்று (19) தெரிவித்ததாக இன்டர்பக்ஸ் செய்தி முகவரகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வெண் கடலிலுள்ள அட்மிரல் கொர்ஷொவ் கப்பலில் இருந்தே குறித்த ஏவுகணை ஏவப்பட்டதாக இன்டர்பக்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

நேபாளம்

# நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமருக்கு வெற்றி



நேபாள பாராளுமன்றத்தின் நம்பிக்கையை, அந்நாட்டின் புதிய பிரதமர் ஷேர் பகதுர் டெயுபா பெற்றுள்ளார்.

அந்தவகையில், அடுத்தாண்டு பொதுத் தேர்தல் நடைபெறும் வரையில் அதிகாரத்தில் டெயுபா தொடரவுள்ளார்.

நேற்று முன்தினம் (18) பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையில் 165 வாக்குகள் பிரதமர் டெயுபாவுக்கு ஆதரவாகக் கிடைத்ததாகவும், 83 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்ததாகவும் சபாநாயகர் அக்னி சப்கொடா அறிவித்துள்ளார்.

சீனாவுடனான உறவுகளை முன்னாள் பிரதமர் கஹட்கா பிரசாத் ஒளி விரும்பியிருந்த நிலையில், இந்தியாவுடனான உறவில் நெருக்கமாக, பிரதமர் டெயுபா நேபாளத்தை கொண்டு செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. அமெரிக்கா

ஊடகவியலாளர்களின்

# அலைபேசிகளை இலக்கு வைத்த மென்பொருள்?



உலகளாவிய ரீதியில் உள்ள ஊடகவியலாளர்கள், அரசாங்க அதிகாரிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்குச் சொந்தமான 37 திறன்பேசிகளை வெற்றிகரமாக 'ஹக்' செய்வதற்கு இஸ்ரேலிய நிறுவனத்தின் மென்பொருள் பயன்படுத்தப்பட்டதாக நேற்று முன்தினம் (18) வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

> **உலகளாவிய ரீதியில் உள்ள ஊடகவியலாளர்கள், அரசாங்க அதிகாரிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்குச் சொந்தமான 37 திறன்பேசிகளை வெற்றிகரமாக 'ஹக்' செய்வதற்கு இஸ்ரேலிய நிறுவனத்தின் மென்பொருள் பயன்படுத்தப்பட்டது**

17 ஊடக நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஒன்றிலேயே இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜமால் கஷொக்ஜிக்கு நெருக்கமான இரண்டு பெண்களின் அலைபேசிகளை, அவர் கொல்லப்படுவதற்கு முன்பும், பின்பும் இலக்கு வைப்பதற்கும் இந்த மென்பொருள் பயன்படுத்தப்பட்டதாக வொஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், யார் 'ஹக்' செய்ய முயன்றதாக அல்லது ஏனென்று குறித்த விசாரணை வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

பருவகால மழையை அடுத்து

# மொங்கோலியாவில் அணைகள் தகர்ந்தன

சீனாவின் வடமேற்கு பிராந்தியமான மொங்கோலியாவிலுள்ள இரண்டு அணைகள் தகர்ந்துள்ளதாக நீர் அமைச்சு நேற்று (19) தெரிவித்துள்ளது.


பருவகால மழையை அடுத்தே இவ்வாறு அணைகள் தகர்ந்துள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகலிலேயே இந்த அணைகள் தகர்ந்துள்ளன.

இந்த அணைகள் மூலம் 46 மில்லியன் கியூபிக் கொள்ளளவுடைய நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்ததாக நீர் வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தாழ்நிலப் பகுதிகளில் உள்ளோர் வெளியேற்றப்பட்டதாகவும், எதுவித உயிரிழப்புகளும் பதிவாகவில்லை என குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது.





முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# இலங்கையை வீழ்த்திய இந்தியா

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இந்தியா வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான புதிய அணித் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக பானுக ராஜபக்ஷவும், இந்தியா சார்பாக இஷன் கிஷனும், சூரியகுமார் யாதவ்வும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டனர்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, அவிஷ்க பெர்ணான்டோவின் 33 (35) ஓட்டங்கள் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. எனினும், இந்த இனிங்ஸில் பின்வந்த வீரர்கள் போலவே ஆரம்பத்தைப் பெற்றபோதும் அதைப் குறிப்பிடத்தக்கதாக மாற்றாமல் யுஸ்வேந்திர சஹாலிடம் வீழ்ந்தார்.

இதே பாணியில் மினோத் பானுக 27 (44), பானுக ராஜபக்ஷ 24 (22) ஓட்டங்களுடன் குல்தீப் யாதவ்விடம், தனஞ்சய டி சில்வா 14 (27) ஓட்டங்களுடன் குருனால் பாண்டியாவிடவும், சரித் அஸலங்க 38 (65) ஓட்டங்களுடன் தீபக் சஹரிடமும் வீழ்ந்தனர்.

தொடர்ந்து வந்த தசுன் ஷானகவும் 39 (50) ஓட்டங்களுடன் சஹாலிடம் வீழ்ந்த நிலையில், சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 43 (35), துஷ்மந்த சமீரவின் 13 (07) ஓட்டங்களுடன் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 262 ஓட்டங்களை இலங்கை பெற்றது.

பதிலுக்கு, 263 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, பிறித்திவி ஷாவின் 43 (24) ஓட்டங்கள் மூலம் அதிரடியான ஆரம்பத்தைப் பெற்றதுடன், அவர் தனஞ்சய டி சில்வாவிடம் வீழ்ந்தபோதும் தொடர்ந்து வந்த இஷன் கிஷனின் 59 (42) ஓட்டங்கள் மூலம் வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது.

லக்ஷன் சந்தகானிடம் கிஷன் வீழ்ந்ததுடன், தொடர்ந்து வந்த மனிஷ் பாண்டேயும் 26 (40) ஓட்டங்களுடன் டி சில்வாவிடம் வீழ்ந்த போதும், நிலைத்து நின்ற ஷிகர் தவானின் ஆட்டமிழக்காத 86 (95), சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத 31 (20) ஓட்டங்களோடு 36.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் இந்தியா வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பிறித்திவி ஷா தெரிவானார்.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது கொழும்பில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.



ஒருநாள் சர்வதேசப் போட்டி

# தொடரை கைப்பற்றியது பங்களாதேஷ்

சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், ஹராரேயில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற இரண்டாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 240/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெஸ்லே மட்ஹெவெரே 56 (63), பிரெண்டன் டெய்லர் 46 (57), டியோன் மையர்ஸ் 34 (59), சிகண்டர் ராசா 30 (44), றெஜிஸ் சகப்வா 26 (32) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 4/46, ஷகிப் அல் ஹஸன் 2/42, தஸ்கின் அஹ்மட் 1/38, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/34, மொஹமட் சைஃபுடீன் 1/54)

பங்களாதேஷ்: 242/7 (49.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் ஆ.இ 96 (109), மொஹமட் சைஃபுடீன் ஆ.இ 28 (34), மகமதுல்லா 26 (35), லிட்டன் தாஸ் 21 (33), தமிம் இக்பால் 20 (34), அஃபிப் ஹொஸைன் 15 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுக் ஜொங்வி 2/46, பிளஸிங் முஸர்பனி 1/31, றிச்சர்ட் நகரவா 1/33, வெஸ்லே மட்ஹெவெரே 1/39, சிகண்டர் ராசா 1/33)

போட்டியின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

# பிரித்தானிய குரான் பிறீ: வென்றார் ஹமில்டன்



பிரித்தானிய குரான் பிறீயை நடப்புச் போர்மியுலா வண் சம்பியனான லூயிஸ் ஹமில்டன் வென்றுள்ளார்.

நேற்று (19) இடம்பெற்ற குறித்த பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸ் அணியின் ஹமில்டன், 10 செக்கன்கள் தண்டத்தைப் பெற்றபோதும் வென்றிருந்தார்.

றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பனோடு முதலாவது சுற்றில் மோதியமை காரணமாகவே இத்தண்டத்தை பிரித்தானியாவின் ஹமில்டன் பெற்றிருந்தார்.

எவ்வாறெனினும், பந்தயம் முடிவடைய இரண்டு சுற்றுக்கள் இருக்கையில் பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க்கை முந்தி முதலாமிடத்தை ஹமில்டன் பெற்றிருந்தார்.

பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த மொனாக்கோவின் லெக்கலெர்க் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, ஹமில்டனின் சக மெர்சிடீஸ் அணியின் ஓட்டுநரான வல்ட்டேரி போத்தாஸ் மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தார்.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டி

# பாகிஸ்தானை வென்ற இங்கிலாந்து

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், லீட்ஸில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற இப்போட்டியில் 45 ஓட்டங்களால் இங்கிலாந்து வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

இங்கிலாந்து: 200/10 (19.5 ஓவ. )

பாகிஸ்தான்: 155/9 (20 ஓவ. )

போட்டியின் நாயகன்:



மொயின் அலி

இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியானது, மன்செஸ்டரில் இலங்கை நேரப்படி இன்றிரவு 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 20 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.